இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 69 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 02 – ஞாயிற்றுக்கிழமை 19 அக்டோபர் 2025 – திருச்சி ★★ 16 + 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 69: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 02 - Sunday 19 October 2025 - Trichy ★★ 16 + 16 Pages ₹ 5.00

## ஓய்வு பெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில்

# ஆணவப் படுகொலையைத் தடுக்க ஆணையம்!

## தனிச்சட்டம்: சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முக்கிய அறிவிப்பு!

**சென்னை, அக்.19 -**

**“ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுக்கும்” என்று தெரிவித்து, தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில், ஒய்வு பெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணவப் படுகொலைகளைத் தடுக்க ஆணையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.**

சட்டமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் தொடர்பான விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கெல்லாம் மிகத்தெளிவாக, துல்லியமாக பதிலளித்து நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சிறப்பாக இங்கே பேசியிருக்கிறார். அவருக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நேற்றைய விவாதத்தில் உறுப்பினர்கள் சிலர், ஆணவப் படுகொலை குறித்து தெரிவித்த சில கருத்துகளுக்கு நான் இப்பேரவைக்குத் தங்கள் வாயிலாக பதிலளிக்க விரும்புகிறேன்.

### தமிழர் தம் நெறி!

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற அறநெறியை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சொன்ன வான்புகழ் வள்ளுவர் பிறந்த மண், இந்தத் தமிழ் மண்!

**‘சாதி யிரண்டொழிய வேறில்லை,**
**இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்’**

என்கிறார் அவ்வை மூதாட்டி.

இதுதான் தமிழர் தம் நெறியாகும். தமிழர் போற்றி வந்த பண்பாடு! இடைக் காலத்தில் புகுந்தவர்களால் தொழில் வேற்றுமையானது; சாதி வேற்றுமையாக மாற்றப்பட்டது; உயர்வுதாழ்வு கற்பிக்கப்பட்டது; மேல்கீழ் என்ற வேற்றுமை விதைக்கப்பட்டது. வேற்றுமை விதைக்கப்பட்ட உடனேயே ஒற்றுமைக்கான குரல்களும் தமிழ் மண்ணில் உரக்க ஒலித்ததைக் காண்கிறோம். பல சீர்திருத்தக் கருத்துகள் இயக்கமாகவே உருவெடுத்துள்ளன. அயோத்திதாசப் பண்டிதர், தந்தை பெரியார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா ஆகியோர் இந்தச் சீர்திருத்தச் சிந்தனைகளை தமிழ் மண்ணில் விதைத்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2025) சட்டமன்றப் பேரவையில், ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுக்கும் என்று தெரிவித்து உரையாற்றினார்.

கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரம் பொருந்திய பதவிகள், அனைவருக்கும் சமவாய்ப்பு, சம அதிகாரம் ஆகியவற்றை தருவதன் மூலமாக யாவரும் ஒருவரே என்பதை உருவாக்கவே இந்த இயக்கங்கள் போராடின; வாதாடின; மன மாற்றங்களை செய்தன. சாதிக்கு, மதத்துக்கு தரப்பட்ட முக்கியத்துவத்தை தமிழ் மொழிக்கு, தமிழ் இனத்துக்கு தரும் சிந்தனையை திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கங்கள் விதைத்தன. இனமும், மொழியும் நமது அடையாளங்களாக மாற்றியது இதன் சாதனைகள்.

### கலைஞர் வழியில் சமூக சீர்திருத்த ஆட்சி!

சீர்திருத்தக் கருத்துகளை பரப்புரை செய்து வந்த அதே காலக்கட்டத்தில் அதற்கான சட்டங்களையும், திட்டங்களையும் கொண்டு வந்து, சமூக சீர்திருத்த ஆட்சியை தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நடத்தினார்கள். அதன் வழித்தடத்தில் ‘திராவிட மாடல்’ ஆட்சியை நாங்கள் நெஞ்சை நிமிர்த்தி நடத்தி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

> **“அனைத்துவிதமான ஆதிக்க மனப்பான்மைக்கும் முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். ஆதிக்க எதிர்ப்பும் சமத்துவ சிந்தனையும் கொண்ட சுயமரியாதையும் அன்பும் சூழ்ந்த மானுடத்தை உருவாக்குவதற்கான பரப்புரையை ஓர் இயக்கமாக முன்னெடுத்து செல்ல வேண்டியது நம் அனைவரின் கடமை! (மேசையைத் தட்டும் ஒலி) சீர்திருத்தப் பரப்புரையும் குற்றத்திற்கான தண்டனையும், வாளும் கேடயமுமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.”**

அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கி இருக்கிறோம். பெரியார் பிறந்த நாளிலும், அம்பேத்கர் பிறந்த நாளிலும் இந்த நாடே உறுதிமொழி எடுக்கிறது. இவர்கள் பிறந்த நாளில் அனைவரும் சமூகநீதி, சமநீதி உறுதிமொழி எடுப்பது சாதாரணமான சாதனையல்ல. தமிழ்நாடு சட்டப்பேரவை, இதே அவையில் 29.04.2025 அன்று உரையாற்றிய போது, ஆதிக்கத்தின் அடையாளமாகவும் தீண்டாமைக்கான குறியீடாகவும் வசைச் சொல்லாகவும் இருக்கும் “காலனி” என்ற சொல்லை நீக்குவோம் என்று அறிவித்தேன். பள்ளி, கல்லூரி விடுதிகளில் சாதி அடையாளங்கள் இருக்கக்கூடாது என்பதற்காக, அவற்றை “சமூக நீதி” விடுதிகளாகப் பெயர் மாற்றியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

### வேற்றுமையை விரட்டி சமத்துவ சமுதாயம் உருவாக்குவோம்!

பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய பிரதமர் அவர்களை சமீபத்தில் நேரில் சந்தித்து, முக்கியமான ஒரு கோரிக்கையை வைத்தேன். “ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள சாதிப் பெயரில், இறுதி எழுத்தில் முடிவடையும் ‘இன்’ என்பதற்குப் பதிலாக ‘இர்’ என விகுதி மாற்றம் செய்து, அந்தச் சமூக மக்களுக்கு உரிய மரியாதை கிடைக்க வழி செய்யும்வண்ணம் ஒன்றிய அரசு உரிய சட்டம் இயற்ற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்” என்பதுதான் அந்தக் கோரிக்கை.

சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடமை, பொது உரிமை, கல்வி உரிமை, அதிகார உரிமை ஆகிய கொள்கைகள்தான் வேற்றுமையை, பகைமையை விரட்டும். அதனைத் தான் நாங்கள் செய்து வருகிறோம். இதன் மூலமாகத் தான் சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க முடியும்.

### பண்பட்ட சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது!

ஆனால், இத்தகைய சூழலில் நாட்டில் நடைபெறும் சில சம்பவங்கள் நமது மனதை வேதனையடைய வைத்துள்ளன. இதற்காகவா நமது தலைவர்கள் போராடினார்கள், நாம் போராடி வருகிறோம் என்ற வேதனை ஏற்படுகிறது. உலகம் அறிவுமயமாகி வருகிறது. “ஆனால் அன்புமயம் ஆவதை எது தடுக்கிறது?” என்பதுதான் இன்று சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களை வாட்டி வருகிறது. உலகம் முழுக்க பரவி, அறிவினால் மதிக்கப்பட்டு வரும் நம் தமிழ்ச் சமுதாயம், உள்ளூரில் சண்டை போட்டுக்கொள்வது என்ன நியாயம்? என்பதுதான் நம்மை வருத்தும் கேள்வியாக அமைந்திருக்கிறது. எதன் காரணமாகவும் ஒருவரை மற்றவர் கொல்வதை நாகரிக சமுதாயத்தால் ஏற்க இயலாது. கொல்வதை மட்டுமல்ல பகைப்பதை, சண்டை போட்டுக் கொள்வதை, அவமானப்படுத்துவதை என எதையும் பண்பட்ட, வளர்ச்சியுற்ற ஒரு சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வப்போது ஏதேனும் ஒரு பகுதியில் நடந்துவிடும் ஒரு துயரமான சம்பவம் நம் நெஞ்சை உலுக்கி விடுகிறது. நம் சமுதாயத்தையே தலைகுனியச் செய்துவிடுகிறது. பெண்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கையை தாங்களே தீர்மானிக்கும் உரிமையைப் பறிக்கும் ஆணாதிக்கமும் இந்தக் குற்றச் செயல்களுக்குப் பின்னால் ஒளிந்திருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். இந்த வேதனையைத்தான் நேற்றைய தினம் நமது உறுப்பினர்கள் பலரும் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறீர்கள். ஆணவப் படுகொலைகளைத் தடுக்க வேண்டும், எப்படியாவது தடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

---

## ஆளுநர், நீதிபதி போன்று செயல்பட முடியாது !

# அரசின் மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பியது அரசியல் சாசனத்துக்கு எதிரானது!

## தமிழ்நாடு அரசு - உச்சநீதிமன்றத்தில் ஆணித்தரம்!

**புதுடெல்லி, அக்.19-**

**தமிழ்நாடு அரசின் மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பியது அரசியல் சாசனத்துக்கும், உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கும் எதிரானது என உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு உறுதிபட தெரிவித்துள்ளது. ஆளுநர், நீதிபதி போன்று செயல்பட முடியாது என்றும் தமிழ்நாடு அரசு ஆணித்தரமாக கூறியுள்ளது.**

கலைஞர் பல்கலைக்கழக மசோதா, தமிழ்நாட்டு விளையாட்டு பல்கலைக்கழக மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல் வழங்காமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியதை எதிர்த்து தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோத்தகி, அபிஷேக் சிங்வி, பி.வில்சன் ஆகியோர் மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது அரசியல் சாசனத்துக்கும், உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கும் எதிரானது என்று தெரிவித்தனர்.

ஆளுநர் நீதிபதி போன்று செயல்பட முடியாது என்றும் அமைச்சரவை முடிவுக்கு எதிராக ஆளுநர் தன்னிச்சையாக முடிவு எடுத்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பி உள்ளார். குடியரசுத் தலைவர் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க தடை விதிக்க வேண்டும் என்று அபிஷேக் சிங்வி வாதிட்டார்.

இதனை தொடர்ந்து, குடியரசுத் தலைவர் கேள்வி மீதான உத்தரவுக்கு பிறகு வழக்குகளை விசாரிப்பதாக கூறி இந்த இரண்டு வழக்குளையும் உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது. இதனிடையே, நவம்பர் 21 ஆம் தேதி குடியரசுத் தலைவர் கேள்வி வழக்கில் உத்தரவு வர வாய்ப்புள்ளதாக தலைமை நீதிபதி அமர்வு தெரிவித்து வழக்கை ஒத்திவைத்தது.

தமிழ்நாடு அரசு வழக்கில் மசோதாக்கள் மீது ஆளுநர், குடியரசுத் தலைவர் முடிவு எடுக்க அதிகபட்சமாக 3 மாத கால நிர்ணயம் செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு எதிராக, குடியரசுத் தலைவர் மூலம் ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்தில் கேள்வி எழுப்பியது. அதனை தலைமை நீதிபதி தலைமையிலான 5 நீதி பதிகள் அமர்வு விசாரித்து தீர்ப்பை ஒத்துவைத்துள்ளது. இதை எதிர்த்து தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கின் வாதங்கள் முடிவடைந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் நவம்பர் 23ஆம் தேதி ஓய்வு பெற உள்ளார். அதற்கு முன்னதாக நவம்பர் 21ம் தேதி வாக்கில் உத்தரவு பிறப்பிக்கப் படும் என்று தலைமை நீதிபதி அமர்வு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.